# Chapter – 8

# அண்டம் மற்றும் விண்வெளி அறிவியல்

---

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**Question 1.**
பின்வருவனவற்றுள் எது வான்பொருள்?
அ) சூரியன்
ஆ) சந்திரன்
இ) விண்மீன்கள்
ஈ) இவை அனைத்தும்

**விடை:**
ஈ) இவை அனைத்தும்

**Question 2.**
மங்கள்யான் ……………………க்கு அனுப்பப்பட்டது.
அ) சந்திரன்
ஆ) செவ்வாய்
இ) வெள்ளி
ஈ) புதன்

**விடை:**
ஆ) செவ்வாய்

**Question 3.**
சந்திரயான் – I விண்ணில் செலுத்தப்பட்ட நாள்
அ) 2008 அக்டோபர் 22
ஆ) 2008 நவம்பர் 8
இ) 2019 ஜூலை 22
ஈ) 2019 அக்டோபர் 22

**விடை:**
அ) 2008 அக்டோபர் 22

**Question 4.**
சிவப்புக் கோள் என்று அழைக்கப்படுவது ……………….
அ) புதன்
ஆ) வெள்ளி
இ) பூமி
ஈ) செவ்வாய்

**விடை:**
ஈ) செவ்வாய்

**Question 5.**
ராக்கெட்டில் பயன்படும் தத்துவம் ……………………….
அ) நியூட்டனின் முதல் விதி
ஆ) நியூட்டனின் இரண்டாம் விதி
இ) நியூட்டனின் மூன்றாம் விதி
ஈ) இவை அனைத்தும்

**விடை:**
இ) நியூட்டனின் மூன்றாம் விதி

**Question 6.**
கிரியோஜெனிக் எரிபொருள் ………. எவ்வெப்பநிலையில் சேகரித்து வைக்கப்படும்?
அ) அறை
ஆ) குறைந்த
இ) மிகக்குறைந்த
ஈ) மிக அதிக

**விடை:**
இ) மிகக்குறைந்த

**Question 7.**
நாசாவின் ……….. திட்டம் முதன்முதலில் மனிதர்களை நிலவுக்கு அனுப்பியது.
அ) அப்போலோ – 5
ஆ) அப்போலோ – 8
இ) அப்போலோ – 10
ஈ) அப்போலோ – 11

**விடை:**
ஆ) அப்போலோ – 8

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

**Question 1.**
விண்மீன்களைப் பற்றியும், கோள்களைப் பற்றியும் படிக்கும் அறிவியல் பிரிவு .......

**விடை:**
வானியல்

**Question 2.**
சூரியன் ........... விண்மீ ன் திரளைச் சார்ந்தது.

**விடை:**
பால்வெளி

**Question 3.**
செவ்வாய்க்கோள் ........ நாட்களுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது.

**விடை:**
687

**Question 4.**
பிற கோள்களுக்கு விண்கலனை அனுப்பிய முதல் இந்திய விண்வெளித் திட்டம்

**விடை:**
மங்கள்யான்

**Question 5.**
நிலவின் மேற்பரப்பில் நடந்த முதல் மனிதர் ............. ஆவார்.

**விடை:**
நீல் ஆம்ஸ்ட்ராங்

## III. சரியா அல்லது தவறா எனக்கூறுக. தவறான கூற்றைத் திருத்தி எழுதுக

**Question 1.**
சூரியன் மற்றும் இதர வான்பொருள்கள் சேர்ந்து சூரியக் குடும்பத்தை உருவாக்குகின்றன.

**விடை:**
சரி

**Question 2.**
சந்திராயன் – I ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

**விடை:**
சரி

**Question 3.**
செவ்வாய்க் கோள் சூரியக் குடும்பத்தில் உள்ள மிகச் சிறிய கோள் ஆகும்.

**விடை:**
தவறு
சரியான **விடை :** செவ்வாய்க் கோள் சூரிய குடும்பத்தில் உள்ள இரண்டாவது சிறிய கோள் ஆகும்.

**Question 4.**
PSLV மற்றும் GSLV ஆகியவை இந்தியாவின் புகழ்பெற்ற செயற்கைக் கோள்கள் ஆகும்.

**விடை:**
சரி

**Question 5.**
ராக்கெட்டின் இயக்கு பொருள்கள் திண்மநிலையில் மட்டுமே காணப்படும்.

**விடை:**
தவறு சரியான **விடை :**

ராக்கெட்டின் இயக்கு பொருள்கள் திண்ம, நீர்ம மற்றும் திரவநிலை வாயுக்களாக காணப்படுகின்றன.

## IV. பொருத்துக

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | சந்திரயான் | அ | எரிபொருள் | ஆ | சந்திரன் |
| 2 | மங்கள்யான் | ஆ | சந்திரன் | உ | செவ்வாய் |
| 3 | கிரையோஜெனிக் | இ | முதன்முதலில் மனிதனை நிலவுக்கு அனுப்பிய திட்டம் | அ | எரிபொருள் |
| 4 | அப்போலோ - 8 | ஈ | முதன்முதலில் மனிதனை நிலவில் தரையிறங்கச் செய்த திட்டம் | இ | முதன்முதலில் மனிதனை நிலவுக்கு அனுப்பிய திட்டம் |
| 5 | அப்போலோ - 11 | உ | செவ்வாய் | ஈ | முதன்முதலில் மனிதனை நிலவில் தரையிறங்கச் செய்த திட்டம் |

## V. சுருக்கமாக விடையளி

**Question 1.**
வான்பொருள்கள் என்றால் என்ன?

**விடை:**
வானத்தில் உள்ள விண்மீன்கள், கோள்கள், சந்திரன் மற்றும் விண்கற்கள், வால்மீன்கள்
போன்ற பிற பொருட்கள் ஆகியவை வான்பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**Question 2.**
விண்மீ ன் திரள் – வரையறு.

**விடை:**
தங்களுக்கு இடையே உள்ள கவர்ச்சி விசையினால் பிணைக்கப்பட்ட லட்சக்கணக்கான விண்மீன்களைக் கொண்ட தொகுப்பு விண்மீன் திரள் எனப்படும்.

**Question 3.**
சந்திரயான் – 1 திட்டத்தின் நோக்கங்கள் யாவை?

**விடை:**

- சந்திரனில் நீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை கண்டறித.
- சந்திரனில் உள்ள தனிமங்களை கண்டறிதல்.
- சந்திரனில் ஹீலியம் – 3 இருப்பதை ஆராய்தல்.
- சந்திரனின் முப்பரிமான வரைபடத்தை உருவாக்குதல்.
- சூரியக் குடும்பத்தின் பரிணாம வளர்ச்சியை ஆராய்தல்.

**Question 4.**
மங்கள்யான் திட்டத்தின் நோக்கங்களை வரிசைப்படுத்துக.

**விடை:**

- கோள்களுக்கு இடையேயான விண்வெளித் திட்டத்திற்கு தேவையான தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.
- செவ்வாயின் மேற்பரப்பை ஆராய்தல்.
- செவ்வாயின் வளிமண்டலத்தில் உள்ள பகுதிப் பொருள்களை அறிதல்.
- எதிர்காலத்தில் செவ்வாய்க் கோளில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகளையும். கடந்த காலங்களில் உயிரினங்கள் இருந்தனவா என்பது பற்றிய தகவல்களையும் அறிந்து கொள்ளுதல்.

**Question 5.**
கிரையோஜெனிக் எரிபொருள் என்றால் என்ன?

**விடை:**

- இந்த வகை இயக்கு பொருள்களின் எரிபொருள் அல்லது ஆக்ஸிகரணி அல்லது இரண்டும் திரவநிலை வாயுக்களாக இருக்கும்.
- இவை மிகக்குறைந்த வெப்பநிலையில் வைக்கப்பட்டிருக்கும்.
- இவ்வகை இயக்கு பொருள்களை எரியூட்ட தனியான அமைப்புகள் தேவை இல்லை.
- இவற்றை ஒன்றாகச் சேர்த்து கலக்கும்போது, அவை ஒன்றோடொன்று வினைபுரிந்து எரியத் தொடங்குகின்றன.

**Question 6.**
நாசாவில் பணியாற்றிய சில இந்தியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**விடை:**

- கல்பனா சாவ்லா
- சுனிதா வில்லியம்ஸ்

## VI. விரிவாக விடையளி

**Question 1.**
சந்திரயான் – 1ன் சாதனைகள் யாவை?

**விடை:**

- சந்திரனின் மணற்பரப்பில் நீர் மூலக்கூறுகள் இருப்பதை கண்டறிந்தது.
- சந்திரன் முற்காலத்தில் உருகிய நிலையில் இருப்பதை உறுதி செய்தது.
- அமெரிக்காவின் விண்கலங்கள் அப்போலோ – 15 மற்றும் அப்போலோ – 11 ஆகியவை தரையிறங்கிய இடங்களின் படங்களை பதிவு செய்தது.
- சந்திரனின் கனிம வளம் பற்றிய தகவல்கள் உயர்திறன் கொண்ட நிறமாலைமானி மூலம் பெறப்பட்டன.
- X-கதிர் படக்கருவியின் மூலம் சந்திரனில் அலுமினியம், மெக்னீசியம் மற்றும் சிலிக்கான் இருப்பது கண்டறியப்பட்டது.
- சந்திராயன் – I புகைப்படக் கருவியின் மூலம் 75 நாட்களில் எடுக்கப்பட்ட 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படங்கள் பூமிக்கு அனுப்பப்பட்டன.
- நிலவில் உள்ள மேடுகள் மற்றும் பள்ளங்களைக் கொண்ட படங்களிலிருந்து சந்திரனின் மேற்பரப்பு கிண்ணக்குழிகளைக் கொண்டது என கண்டறியப்பட்டது.
- சந்திரயான் – I பூமியின் முழு வடிவத்தையும் முதன் முதலாக பதிவு செய்து அனுப்பியது.
- சந்திரயான் – I நிலவின் பரப்பில் மனிதர்களுக்கு உறைவிடமாகப் பயன்படும் பல குகைகளை கண்டறிந்தது.

**Question 2.**
ராக்கெட்டின் பகுதிகளை விளக்குக.

**விடை:**
I- கட்டமைப்பு அமைப்பு :

- இவை ராக்கெட்டை உள்ளடக்கிய சட்டம் ஆகும்.
- இவை மிகவும் வலிமையான, ஆனால் எடை குறைந்த டைட்டானியம் அல்லது அலுமினியம் போன்ற பொருட்களால் உருவாக்கப்படுகின்றன.
- ராக்கெட் பறக்கும் போது அதற்கு நிலைப்புத் தன்மை ஏற்படுத்துவதற்காக, சில ராக்கெட் சட்டத்தின் அடிப்பகுதியில் துடுப்புகள் இணைக்கப்படுகின்றன.

II – பணிச்சுமை அமைப்பு:

- சுற்று வட்டப்பாதையில் விடப்படுவதற்காக ராக்கெட்டினால் சுமந்து செல்லப்படும் செயற்கைக் கோள்கள் பணிச்சுமை ஆகும். இவை திட்டப்பணிகளை சார்ந்தது.
- இவை தகவல் தொடர்பு, வானிலை ஆய்வு, உளவு பார்த்தல், கோள்களை ஆராய்தல் மற்றும் கண்காணிப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளும் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கு ஏற்றவாறு அமைக்கப்படுகின்றன.

III – வழிகாட்டு அமைப்பு :

- இவ்வமைப்பானது, ராக்கெட் செல்ல வேண்டிய பாதை குறித்து வழிகாட்டுகிறது.
- இவை உணர்விகள், கணினிகள், ரேடார் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றை உள்ளடக்கியது.

IV – உந்துவிசை அமைப்பு :

- இது எரிபொருள் தொட்டிகள், இறைப்பான்கள் மற்றும் எரியூட்டும் அறை ஆகியவற்றை கொண்டுள்ளது.

- i) திரவ உந்துவிசை அமைப்பு மற்றும் ii) திட உந்து விசை அமைப்பு என இரண்டு முக்கியமான உந்துவிசை அமைப்புகள் உள்ளன.

**Question 3.**
நாசாவின் அப்போலோ திட்டங்கள் குறித்து குறிப்பு வரைக.

**விடை:**

- அப்போலோ விண்வெளி திட்டங்கள் நாசாவின் மிகப்புகழ்பெற்ற திட்டங்கள் ஆகும்.
- இவற்றின் மூலம், அமெரிக்க விண்வெளி வீரர்கள் நிலவில் தரையிறங்கினர்.
- இது ஒட்டுமொத்தமாக 17 திட்டங்களைக் கொண்டது. இதில் அப்போலோ – 8 மற்றும் அப்போலோ – 11 ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை.
- அப்போலா – 8 என்பது முதன்முதலில் மனிதர்களை நிலவுக்கு அனுப்பிய திட்டமாகும். இதில் விண்கலம் நிலவைச் சுற்றிய பின் மீண்டும் பூமிக்கு வந்தடைந்தது.
- அப்போலா – 11 திட்டமானது முதன்முதலில் மனிதனை நிலவில் தரையிரங்க செய்த திட்டம் ஆகும். இவ்விண்கலமானது 1969 ஆம் ஆண்டு ஜூலை 20ம் நாள் நிலவில் தரையிறங்கியது. அப்போலா – 11ல் பயணித்த நீல் ஆம்ஸ்ட்ராங் முதன் முதலில் நிலவின் மேற்பரப்பில் காலடி வைத்தார்.

## VII. உயர்சிந்தனை வினாக்கள்

**Question 1.**
நாம் எப்போதும் நிலவின் ஒரு பகுதியை மட்டுமே பார்க்க முடிகிறது. ஏன்?

**விடை:**

- நிலவானது பூமியை ஒரு குறிப்பிட்ட பாதையில் சுற்றி வருகிறது.
- இதனால் ஏற்படும் ஒத்திசைவின் காரணமாகவே நம்மால் நிலவின் ஒரு பகுதியை மட்டும் காண முடிகிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

சீனாவின் சுமார் ………… ஆண்டுகளுக்கு முன்பாகவே ராக்கெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
அ) 700 ஆண்டுகள்
ஆ) 900 ஆண்டுகள்
இ) 800 ஆண்டுகள்
ஈ) 600 ஆண்டுகள்

**விடை:**
இ) 800 ஆண்டுகள்

**Question 2.**
இந்தியா தனது முதல் செயற்கைக் கோளான ஆரியபட்டாவை ………….. ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தியது.
அ) 1875
ஆ) 1975
இ) 1675
ஈ) 1985

**விடை:**
ஆ) 1975

**Question 3.**
…………….. திட்டமானது 312 நாட்கள் செயல்பட்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில் 95% முடிக்கப்பட்டது.
அ) சந்திராயன் -I
ஆ) சந்திராயன் – II
இ) மங்கள்யான்
ஈ) இவை அனைத்தும்

**விடை:**
அ) சந்திராயன் -I

**Question 4.**
செவ்வாய் தன் அச்சில் …………….. தன்னைத்தானே சுற்றி வருகிறது.
அ) 30 மணி 30 நிமிடம்
ஆ) 37 மணி 24 நிமிடம்

இ) 27 மணி 27 நிமிடம்
ஈ) 24 மணி 37 நிமிடம்

**விடை:**
ஈ) 24 மணி 37 நிமிடம்

**Question 5.**
.................................. விண்வெளியில் பூமியின் 252 சுற்றுவட்டப் பாதையில் 10.4 மில்லியன் மைல்கள் பயணம் செய்துள்ளனர்.
அ) சுனிதா வில்லியம்ஸ்
ஆ) கல்பனா சாவ்லா
இ) நீல் ஆம்ஸ்ட்ராங்
ஈ) ராகேஷ் சர்மா

**விடை:**
ஆ) கல்பனா சாவ்லா

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக

**Question 1.**
இயற்கையில் பூமிக்கென உள்ள ஒரே துணைக்கோள் ......ஆகும்.

**விடை:**
சந்திரன்

**Question 2.**
தொடக்கத்தில் மரக்குழாய்களில் ......... நிரப்பப்பட்டு ராக்கெட்டுகள் உருவாக்கப்பட்டன.

**விடை:**
வெடிமருந்து

**Question 3.**
கட்டமைப்பு அமைப்பில் எடை குறைந்த ............ போன்ற பொருட்களால் ராக்கெட் உருவாக்கப்படுகின்றன.

**விடை:**
டைட்டானியம்
(அ) அலுமினியம்

**Question 4.**
................ என்பது 64 கிராம் மட்டுமே எடை கொண்ட உலகின் மிகச் சிறிய செயற்கைக் கோள் ஆகும்.

**விடை:**
கலாம்சாட்

**Question 5.**
சந்திராயன் – 1 புகைப்படக் கருவி மூலம் .......... எடுக்கப்பட்ட 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படங்கள் பூமிக்கு அனுப்பப்பட்டன.

**விடை:**
75 நாட்கள்

**III. சரியா / தவறா என கண்டுபிடி. (தவறாக இருப்பின் சரியான விளக்கத்தை எழுதுக)**

**Question 1.**
விண்வெளி திட்டத்தின்போது ஒற்றை ராக்கெட்டின் மூலம் 108 செயற்கை கோள்களை விண்ணில் செலுத்தியது. இவரின் திறமைக்கு மிகச் சிறந்த உதாரணம் தருக.

**விடை:**
தவறு சரியான

**விடை:**
ஒருவிண்வெளி திட்டத்தின்போது ஒற்றை ராக்கெட்டின் மூலம் 104 செயற்கை கோள்களை விண்ணில் செலுத்தியது. இவரின் திறமைக்கு மிகச் சிறந்த உதாரணம் ஆகும்.

**Question 2.**
Dr. மயில்சாமி அண்ணாதுரை சந்திராயன்-1, சந்திராயன்-2 மற்றும் மங்கள்யான் திட்டங்களில் திட்ட இயக்குநராகப் பணியாற்றியுள்ளார்.

**விடை:**
சரி

**Question 3.**
சந்திராயன் – 2 என்ற தொடர் திட்டத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் 2019ம் ஆண்டு ஜூலை 22ம் நாள் செயல்படுத்தியது.

**விடை:**
சரி

## IV. பொருத்துக

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | விண்வெளி வீரர் | அ | செவ்வாய்க் கோள் | ஈ | ராகேஷ் சர்மா |
| 2 | வானியலாளார்கள் | ஆ | இந்தியா | அ | செவ்வாய்க் கோள் |
| 3 | ராக்கெட் மனிதர் | இ | அமெரிக்கா | உ | கைலாசம் வடிவு சிவன் |
| 4 | கல்பனா சாவ்லா | ஈ | ராகேஷ் சர்மா | ஆ | இந்தியா |
| 5 | சுனிதா வில்லியம்ஸ் | உ | கைலாசம் வடிவு சிவன் | இ | அமெரிக்கா |

## V. சுருக்கமான விடையளி

**Question 1.**
இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற ராக்கெட்டின் பெயர்களை எழுதுக.

**விடை:**

- PSLV – துருவத் துணைக்கோள் செலுத்தும் வாகனம்
- GSLV – புவிநிலைத் துணைக்கோள் செலுத்து வாகனம்

**Question 2.**
இந்திய நாடு செவ்வாய்க் கோளை அடைந்த பிறகு மீண்டும் செவ்வாய் கோளை அடைந்த பிற நிறுவனங்கள் யாவை?

**விடை:**

- சோவியத் விண்வெளி ஆய்வு நிறுவனம்
- நாசா
- ஐரோப்பிய விண்வெளி முகாம்

**Question 3.**
பிரக்யான் என்பது யாது?

**விடை:**

- இது பிரக்யான் என்னும் பெயர் கொண்ட ஆறு சக்கரங்களை உடைய ரோபோ வாகனம் ஆகும்.
- இதன் பொருள் அறிவு என்பதாகும்.

**Question 4.**
சந்திரனில் தரையிறங்கிய விண்கலத்தில் பயணித்த விண்வெளி வீரர்களின் பெயர்களை எழுதுக.

**விடை:**

- நீல் ஆம்ஸ்ட்ராங்
- புஷ் ஆல்டிரின்
- மைக்கல் காலின்ஸ் குழுவினர்.

**Question 5.**
இயக்கும் பொருட்கள் என்பது யாது?

**விடை:**

- இயக்கு பொருள் என்பது ஒரு வேதிப்பொருள் ஆகும்.
- இப்பொருள் எரியும் போது உருவாகும் அழுத்தப்பட்ட வாயுக்களின் ஆற்றலைப் பயன்படுத்தி ராக்கெட்டானது புவியீர்ப்பு விசைக்கு எதிராக உயர்த்தப்படுகிறது.

## VI. விரிவான விடையளி

**Question 1.**
சந்திரனை பற்றி விரிவாக எழுதுக?

**விடை:**

- இயற்கையில் பூமிக்கென உள்ள ஒரே துணைக்கோள் சந்திரன் ஆகும்.
- இது பூமியிலிருந்து சுமார் 3,84,400 கி.மீ தொலைவில் உள்ளது.
- இதன் விட்டம் 3474 கி.மீ. ஆகும்.
- சந்திரன் தாமாக ஒளிர்வது இல்லை .
- சந்திரனில் வளிமண்டலம் இல்லை .

- இது சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிர்களையே எதிரொளிக்கிறது.
- இது தன்னைத்தானே சுற்றி வர எடுத்துக்கொள்ளும் நேரமும், இது பூமியைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் நேரமும் சமமாக இருப்பதால் நாம் எப்போதும் சந்திரனின் ஒரு பகுதியையே பார்த்து வருகிறோம்.

**Question 2.**
செவ்வாய் கோளை பற்றி விரிவாக எழுதுக

**விடை:**

- சூரியனிலிருந்து நான்காவதாக அமைந்துள்ள கோள் செவ்வாய் ஆகும்.
- இது சூரியக் குடும்பத்தில் உள்ள இரண்டாவது சிறிய கோளாகும்.
- இதன் சிவந்த நிறத்தின் காரணமாக இது சிவப்புகோள் என்று அழைக்கப்படுகிறது.
- இக்கோளின் மேற்பரப்பில் உள்ள இரும்பு ஆக்சைடு மற்றும் அதன் வளிமண்டலத்தில் உள்ள தூசுகள் அதற்கு சிவப்பு நிறத்தைத் தருகிறது.
- இது தன் அச்சில் 24 மணி 37 நிமிடங்களில் தன்னைத்தானே சுற்றி வருகிறது.
- மேலும் 687 நாட்களுக்கு ஒரு முறை சூரியனையும் சுற்றி வருகிறது.
- இதன்சுற்றுக்காலம்மற்றும் காலநிலை ஆகியவை பூமியை ஒத்தியிருப்பதால் வானியலாளர்கள் செவ்வாய்க் கோள் பற்றிய ஆய்வுகளில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.
- அவர்கள் செவ்வாயின் மேற்பரப்பு, காலநிலை மற்றும் புவியியல் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பல்வேறு மனிதர் அற்ற விண்கலன்களை அனுப்பி வருகின்றனர்.